**C.C. 374 of 2010** **Previous Date : 02.07.2025**

**PW3**

**வேலுசாமி த/பெ.முத்துசாமி**

**13.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**A2 died. A3 split up. A1, A4 to A7 present**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.**

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.11.13 18:33:32 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 374 of 2010** **Previous Date : 02.07.2025**

**PW4**

**சீரங்கன் த/பெ.ராமசாமி**

**13.11.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**A2 died. A3 spilt up. A1, A4 to A7 present**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. சம்பவம் நடந்த சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் தும்பலபட்டியில் குடியிருந்தேன். சம்பவம் கேள்விபட்டு மறுநாள் வந்தேன். நான் மறுநாள் சம்பவயிடத்திற்கு வந்தேனா என்றால் ஆமாம், காலை 11.00 மணிக்கு வந்தேன். என்னை யார் வர சொல்லி கூப்பிட்டார் என்றால் எனது மாமியார் இடத்தை எல்லாம் அடித்து உடைத்துவிட்டார்கள் என்று சொல்லி கூப்பிட்டார். மாமியார் சொல்லி தான் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் இல்லை. நான் எத்தனை மணிக்கு அங்கு வந்தேன் என்றால் காலை 11.00 மணி இருக்கும், வயல் அழிந்து கிடந்தது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் பயிர் முழுவதும் அழிந்திருந்தது என்று எழுதியிருந்தது. அப்போது யார் யார் இருந்தோம் என்றால் நானும், சின்னபாண்டியும் இருந்தோம். காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். எப்போது சென்றேன் என்றால் ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் எத்தனை பேப்பரில் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. இரண்டு மூன்று பேப்பர்கள் இருக்குமா என்றால் இருக்கும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் வண்டி பாதை எவ்வளவு தூரம் சென்றது என்றால் 200 அடி இருக்கும். எவ்வளவு நேரம் அங்கு இருந்தேன் என்றால் 11.00 மணி முதல் 1.00 மணி வரை இருந்தேன். அந்த இடத்தை அளவீடு செய்தார்களா என்றால் இல்லை. நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பு போலிசார் அங்கு இருந்தார்களா என்றால் ஆமாம். அங்கு வரைபடம் வரைந்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். பார்வை மகஜர் தயார் செய்த நேரத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் அழைத்ததால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.13 18:33:41 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date – 02.07.2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 374 of 2010**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Father/Husband's Name : நாகப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**A2 died. A3 split up. A1, A4 to A7 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சுக்கமநாயக்கன்பட்டி சமத்துவபுரத்தில் குடியிருந்து photographer ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.04.2008ம் தேதி காலை சுமார் 10.30 –11.00 மணியளவில் தெற்கு தாதநாயக்கன்பட்டி வழக்கின் சம்பவயிடத்திற்கு சின்னசாமி என்பவர் அழைத்ததன்பேரில் சென்று Photo எடுத்தேன். நிலம், பயிர் சேதமானதையும், வண்டிபாதையும் photo எடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தான் நான் எடுத்த புகைப்படங்கள். **6 புகைப்படங்கள் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** தட்டை பயிறு விளைவித்திருந்தார்கள், அந்த சேதத்தை photo எடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. அந்த இடத்தில் வண்டிபாதை இருந்ததா என்றால் வண்டிபாதை, தட்டைபயிறு எல்லாம் இருந்தது. போலிசார் வாக்குமூலத்தில் வண்டிபாதையில் தட்டைபயிறு அழிமானத்தை photo எடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வண்டிபாதைக்கு மேற்கு பக்கம் செங்குளம் வாய்க்கால் இருக்கிறது என்றால் சரிதான். அந்த வாய்க்காலை புகைப்படம் எடுத்தேனா என்றால் ஆமாம். அதை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். அதன் negativeஐ ஒப்படைத்தேனா என்றால் ஆமாம், ஞாபகமில்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.11.13 18:33:48 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**